# பெப்ரவரி – 23 – சனி

**புனித பெலிக்காப்பு – ஆயர் - மறைசாட்சி**

**நாள்தோறும் உம்மைப் போற்றுவேன்: உமது பெயரை என்றும் எப்பொழுதும் புகழ்வேன். திபா. 145:2**

## முதல் வாசகம் : எபிரேயர் 11 : 1 - 7

சகோதரர் சகோதரிகளே! நம்பிக்கை என்பது நாம் எதிர்நோக்கி இருப்பவை கிடைக்கும் என்னும் உறுதி கண்ணுக்குப் புலப்படாதவை பற்றிய ஐயமற்ற நிலை. இந்த நம்பிக்கையால்தான் நம் மூதாதையர் நற்சான்று பெற்றனர். உலகம் முழுமையும் கடவுளின் சொல்லால் உருவாக்கப்பட்டது என்றும் காணப்படாத வற்றினின்று காணப்படுகிறவை உண்டாயின என்றும் நம்பிக்கை யாலேயே புரிந்து கொள்கிறோம். நம்பிக்கையினால்தான் ஆபேல் காயினுடைய பலியைவிட மேலான பலியைக் கடவுளுக்குச் செலுத்தினார். அதனால் அவர் நேர்மையானவர் எனக் கடவுளிடமிருந்து நற்சான்று பெற்றார். அவருடைய காணிக்கைகளைக் குறித்துக் கடவுளே சான்று பகர்ந்தார். இறந்துபோன போதிலும் இந்த ஆபேல் நம்பிக்கையின் மூலம் இன்னும் பேசிக் கொண்டேயிருக்கிறார். நம்பிக்யையாலேயே ஏனோக்கு சாவுக்குட்படாதபடி கடவளால் எடுத்துக் கொள்ளப்பட்டார். கடவுள் அவரை எடுத்துக் கொண்டதால் அவர் காணாமற் போய் விட்டார். அவர் மேலே எடுத்துக் கொள்ளப்படும் முன்பே கடவுளுக்கு உகந்தவர் என்று நற்சான்று பெற்றவரானார். நம்பிக்கையினாலன்றி எவரும் கடவுளுக்கு உகந்தவராயிருக்க இயலாது. ஏனெனில், கடவுளை அணுகிச் செல்வோர் அவர் இருக்கிறார் என்பதையும் அவரைத் தேடிச் செல்வோருக்குத் தக்க கைம்மாறு அளிக்கிறார் என்பதையும் நம்பவேண்டும். நோவா கண்ணுக்குப் புலப்படாதவை குறித்துக் கடவுளால் எச்சரிக்கப்பட்டபோது, தம் குடும்பத்தைக் காப்பாற்ற, கவனத்தோடு ஒரு பேழையை அமைத்தது நம்பிக்கையினால்தான். அதன் வழியாய் அவர் உலகைக் கண்டித்து இறைவனுக்கு ஏற்புடையவர் என்னும் உரிமைப் பேறு பெற்றதும் நம்பிக்கையினால்தான்.

**பதில்பாடல்:** ஆண்டவரே! உமது பெயரை எப்பொழுதும் போற்றுவேன்.

## நற்செய்தி : மாற்கு 9 : 2 - 13

அக்காலத்தில் இயேசு பேதுருவையும் யாக்கோபையும் யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிக்கொண்டு போனார். அங்கே அவர்கள்முன் அவர் தோற்றம் மாறினார். அவருடைய ஆடைகள் இவ்வுலகில் எந்த சலவைக்காரரும் வெளுக்க முடியாத அளவுக்கு வெள்ளை வெளேரென ஒளிவீசின. அப்போது எலியாவும் மோசேயும் அவர்களுக்குத் தோன்றினர். இருவரும் இயேசுவோடு உரையாடிக் கொண்டிருந்தார்கள். பேதுரு இயேசுவைப் பார்த்து, ”ரபி, நாம் இங்கேயே இருப்பது நல்லது. உமக்கு ஒன்றும் மோசேக்கு ஒன்றும் எலியாவுக்கு ஒன்றுமாக மூன்று கூடாரங்களை அமைப்போம்” என்றார். தாம் சொல்வது என்னவென்று அவருக்குத் தெரியவில்லை. ஏனெனில் அவர்கள் மிகுந்த அச்சம் கொண்டிருந்தார்கள். அப்போது ஒரு மேகம் வந்து அவர்கள்மேல் நிழலிட அந்த மேகத்தினின்று, ”என் அன்பார்ந்த மைந்தர் இவரே. இவருக்குச் செவிசாயுங்கள்” என்று ஒரு குரல் ஒலித்தது. உடனடியாக அவர்கள் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். தங்கள் அருகில் இயேசு ஒருவரைத் தவிர வேறு எவரையும் காணவில்லை. அவர்கள் மலையிலிருந்து இறங்கி வந்துகொண்டிருந்த போது அவர், ”மானிட மகன் இறந்து உயிர்த்தெழும் வரை, நீங்கள் கண்டதை எவருக்கும் எடுத்துரைக்கக் கூடாது” என்று அவர்களுக்குக் கட்டளையிட்டார். அவர்கள் இவ்வார்த்தையை அப்படியே மனத்தில் இருத்தி, ”இறந்து உயிர்த்தெழுதல்” என்றால் என்னவென்று ஒருவரோடு ஒருவர் பேசிக்கொண்டார்கள். அவர்கள் அவரிடம், ”எலியாதான் முதலில் வரவேண்டும் என்று மறைநூல் அறிஞர் கூறுவதேன்?” என்று கேட்டார்கள். அதற்கு அவர், ”எலியா முதலில் வந்து எல்லாவற்றையும் சீர்ப்படுத்தப் போகிறார் என்று கூறுவது உண்மையே. ஆனால் மானிட மகன் பல துன்பங்கள் படவும் இகழ்ந்து தள்ளப்படவும் வேண்டுமென்று அவரைக் குறித்து எழுதப்பட்டுள்ளதே, அது எப்படி? ஆகவே நான் உங்களுக்குச் சொல்கிறேன் எலியா வந்துவிட்டார். அவர்கள் தாங்கள் விரும்பியவாறெல்லாம் அவருக்குச் செய்தார்கள். அவரைக் குறித்து மறைநூலில் எழுதியுள்ளவாறே அவை நிகழ்ந்தன” என்றார்.

**தியானம்:** நாம் ஏதோவொரு விசேட குணாதிசயத்தோடு இவ்வுலகில் பிறந்திருக்கின்றோம். இன்றைய நற்செய்தியிலும் மனிதனது குணாதிசயங்களில் ஒன்றினை சித்தரிப்பதனை நாம் அவதானிக்கலாம். இன்றைய நற்செய்தியில் விபரிக்கப்படும் தலைமைச் சீடர் புனித பேதுரு இறைமகன் கிறிஸ்து இயேசுவின் மறு உருமாற்றத் திருக்காட்சியினைக் கண்டபின்னர் உணர்ச்சிவசப்பட்டு என்ன பேசுவதென்று தடுமாற்றமடைந்து தன்னை மறந்தவராகின்றார். இவ்வாறு உணர்ச்சி வசப்பட்டு தடுமாறும் பேதுருவை நற்செய்தியில் நாம் பல இடங்களில் “ஆண்டவரே நான் பாவி நீர் என்னை விட்டுப் போய்விடும்” (லூக்கா 5:8) எனச் சந்திக்கின்றோம். “என் கண்முன் நில்லாதே சாத்தானே” (மாற்கு8:33) எனக்கண்டனத்திற்கு உள்ளாவதைக் காண்கின்றோம். “இம்மனிதனை எனக்குத் தெரியாது” (மத்தேயு 26:75) எனப்பயத்தில் அவசரப்பட்டு மறுதலிப்பதனையும் அறிந்திருக்கின்றோம். ஆனால் அவசரப்புத்தியால் ஏற்பட்ட தவறுகளால் தெளிந்து, அறிவுபெற்று பெந்தகோஸ்தே நாளில் பொறுமையோடு இறை வல்லமைக்காக காத்திருந்து செபிக்கும் பேதுருவையும் (திருத்துதர்பணி1:13) நாம் சந்திக்கத்தவறவில்லை. புனித பேதுரு போன்று நாமும் இளமைத் துடிப்பில், இவ்வுலக மாயக்கவர்ச்சியில் கவரப்பட்டவர்களாக இறைமகன் கிறிஸ்துவை எமது இரட்சகரும், மீட்பருமென்று ஏற்றுக்கொள்ள முடியாது வாழ்ந்து வருகின்றோம். அதனால், எமது தவறகளைச் சரியென நிருபிப்பது மட்டுமல்ல, இறைமகனின் சாயலாக படைக்கப்பட்ட எமது அயலவரையே ஏற்றுக்கொள்ள முடியாது மட்டந்தட்டி, ஓரங்கட்டி, புறம்பே தள்ளி, அவமதித்து வாழுகிறோம். ஆயினும் கிறிஸ்துவின் நம்பிக்கைக்குரிய தலைமைச்சீடரே தடுமாறியுள்ளபோது அற்ப மனிதர்களாகிய நாம் எம்மாத்திரம்? எனவும் நினைக்கலாம். எனினும் இறுதியில் புனித பேதுரு தனது தவறுகளுக்குப் பரிகாரமாக தலை கீழாக அறையப்பட்டு, மரணித்து, ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை தமது மீட்பரும் இரட்சகருமென பகிரங்கமாக அறிக்கை செய்தார். இவ்வாறு நாமும் அறிக்கை செய்வதற்காக இறைமகன் கிறிஸ்து எம்முன் வந்து மீண்டும் மறுவுருவாக மாட்டார். மாறாக நாம் எமது அயலவரை மதித்து ஏற்பதன் வழியாக ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவை எமது மீட்பரும் இரட்சகருமாக ஏற்று அறிக்கை செய்வோம். அப்படியான வாழ்வால் இறுதி நாளில் ஆண்டவர் இயேசு முன்னிலையில் நாம் மறுவுருவாகுவதற்கு எம்மைத் தயார்செய்வோம்.